வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 02.11.2024 சனிக்கிழமை | இதழ் : 306 | பக்கங்கள் : 12

# அநுரவின் சதியை முறியடிக்க 10 பிரதிநிதிகளைத் தாருங்கள்!

## கஜேந்திரகுமார் கிழக்கில் பரப்புரை



மட்டக்களப்பு, நவம்பர் 02

ஒற்றையாட்சியை தமிழரே விரும்பி ஏற்கச் செய்யும் வரலாற்று துரோகம் இடம்பெறவுள்ளது. அநுர குமாரவின் இந்த சதித் திட்டத்தை முறியடிக்கும் ஒரே தரப்பு நாங்கள்தான். எனவே, எம்மில் 10பேரை பிரதிநிதிகளாக அனுப்ப மக்கள் ஆணை வழங்க வேண்டும் - இவ்வாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரியுள்ளார்.

11



## சுற்றுலா சென்ற பஸ் விபத்து; 2 பல்கலை. மாணவிகள் பலி!

- 6 பேர் தீவிர சிகிச்சை பிரிவில்
- மேலும் 29 பேருக்கு காயங்கள்

கொழும்பு, நவ. 02

பல்கலைக்கழக மாணவர்கள் சுற்றுலா சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 3 மாணவிகள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில், மாணவர்கள் உட்பட 39 பேர் காய மடைந்தனர். இதில், 6 மாணவிகள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

11

## மீண்டும் இலங்கை வருகிறது சர்வதேச நாணய நிதிய குழு!

கொழும்பு, நவ. 02

இலங்கையின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வைப் பற்றி கலந்துரையாட சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளது என ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ண சிறீநிவாசன் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு

11

## மகிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை!

ஜனாதிபதி ஊடக பிரிவு

கொழும்பு, நவ. 02

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாக வெளியான அறிக்கைகள் முற்றிலும் தவறானவை என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

11

## உற்பத்தியாளர்களை ஈர்ப்பதில் வெளிப்படைத்தன்மை அவசியம்

இலங்கையிடம் அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, நவ. 02

உற்பத்தியாளர்களை இலங்கைக்கு ஈர்ப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள் அவசியமானவை என இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தால் முதலீட்டு சூழலை

11

## வல்லை - அராலி வீதியை திறந்து விடக் கோரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 02

வல்லை - அராலி வீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பகுதியையும் மக்கள் பாவனைக்காக திறந்துவிட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வல்லை - அராலி வீதியில் தெல்லிப்பழை கட்டுவன் சந்தியில் இருந்து அச்சுவேலி

11

## வயாவிளான் - அச்சுவேலி வீதி 34 வருடங்களின் பின் மக்களிடம்!

யாழ்ப்பாணம், நவ. 02

வயாவிளானில் 34 வருடங்களாக இராணுவத்தின் பிடியிலிருந்த சுமார் ஒன்றே கால் கிலோமீற்றர் நீளமான வீதி மக்கள் பயன்பாட்டுக்காக திறந்துவைக்கப்பட்டது.

பலாலி வீதியில், வயாவிளான் மத்திய கல்லூரி அருகே - வயாவிளான் சந்தியிலிருந்து - அச்சுவேலி தோலகட்டி சந்தி வரையான வீதியின் ஒரு பகுதியே நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்த வீதியில் இராணுவத்தினர் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் விலக்கிக்

11







## வீதியை திறந்தது கௌரவமே

ஜனாதிபதி அநுர

கொழும்பு, நவ. 02

வடக்கு மாகாண மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று மூன்று தசாப்தகாலத்தின் பின்னர் பலாலி - அச்சுவேலி வீதியை மீளத் திறந்தமையை கௌரவமான விடயமாகக் கருதுகின்றேன் - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் உதவியுடன் மக்களின்

11




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நேற்று இந்தப் பத்தியில் பெண்கள் கல்லூரி ஒன்றின் கழிவறையில் உள்ள கண்ணாடியில் பெண்கள் தமது உதடுகளை பதித்து தினமும் செய்கின்ற குறும்புகளை எப்படி அந்த கல்லூரியின் துப்புரவு தொழிலாளி எதிர்கொண்டார் என்ற கதை ஒன்றை எழுதியிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தத் துப்புரவு தொழிலாளியின் சமயோசித புத்தி போல எமக்கு அரசியல் தலைவர்கள் கிடைக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் அதற்கு உதாரணமாக மட்டக்களப்பில் நான் சந்தித்த சமூக சேவை ஆர்வலர் ஒருவர் கூறிய கருத்தையும் எழுதியிருந்தேன். தான் சொல்கின்ற விடயங்களை இப்படி ஊர்க்குருவி எழுதும் என்று அவர் நினைத்திருக்க மாட்டார். ஆனால், நேற்றைய பத்தியைப் படித்துவிட்டு தொலைபேசியில் அழைத்து, "அட நீங்கள்தானா ஊர்க்குருவி?" என்று கேட்டார்.

"இல்லை இல்லை அது நான் அல்ல. ஆனால், நீங்கள் சொன்ன விடயம் எழுதவேண்டிய விசயமாக இருந்ததால், நான்தான் ஊர்க்குருவிக்கு அதனை கூறினேன். அவரும் எழுதியிருக்கிறார் போல..." என்றேன்.

அப்போதுதான் அவர் சொன்னார், "அந்தக் கதையில் பெண்கள் கல்லூரியில் பணியாற்றும் துப்புரவு தொழிலாளி போல சமயோசித புத்தியுடன் பணியாற்றும் ஓர் அரசியல்வாதி பற்றியும் சொல்லியிருந்தேனே. அதையும் அல்லவா நீங்கள் ஊர்க்குருவிக்கு சொல்லியிருக்க வேண்டும். அதனையும் அவருக்கு சொல்லியிருந்தால், நிச்சயம் ஊர்க்குருவி அந்தத் துப்புரவாளரை, அந்த அரசியல்வாதியுடன்தான் ஒப்பிட்டிருப்பார்..." என்றார் அவர்.

உண்மைதான். நான் அந்த சங்கதியையும் நேற்றே எழுதியிருந்தால், அந்தப் பத்தி ஒரு முழுப்பக்க கட்டுரை ஆகியிருக்கும். அதனால் அதனை தவிர்க்க வேண்டியதாயிற்று.

இதுபற்றி இன்று எழுதலாம் என்று நினைத்திருந்தபோது, அந்த சிவில் சமூக சேவை பிரமுகரும் ஞாபகப்படுத்தியதால் இன்று அதுபற்றி பார்ப்போம்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் அரசு கட்சிக்கு ஓர் ஆசனம் மட்டுமே கிடைக்கக்கூடிய நிலையே இன்று காணப்படுகின்றது என்பது சாதாரண அரசியல் அறிவுள்ளவர்களுக்கும் தெரிந்ததுதான். ஆனால், அப்படி கிடைக்கின்ற ஓர் ஆசனத்தில் யார் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெறுவார்கள் என்பது மில்லியன் டொலர் கேள்வி.

மாவட்டம் முழுவதிலும் அல்ல, தமிழர் தாயகமெங்குமே அந்த நபருக்கு எதிராகவே யாரைப் பார்த்தாலும் பேசுகின்றனர் - அதனால் அந்தக் கட்சிக்கு எதிராகவே பேசுகின்றனர். ஆனால், வாக்களிக்க வாக்குச்சீட்டை கையில் எடுத்ததும் என்ன செய்வார்கள் என்பதும் மில்லியன் டொலர் கேள்விதான்.

வடக்கின் அரசியல்வாதியின் தளபதி போல மட்டக்களப்பில் இயங்கியவர் ஒருவர். அவரின் நிழலாகவே எங்கும் - எப்போதும் காணப்பட்டவர்.

மட்டக்களப்பில் தனக்கென்று ஆதரவாக இளைஞர்களைக் கொண்டிருக்கும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிபெறுவாரா என்று அந்த சமூகசேவை பிரமுகரிடம் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்:

"தேர்தல் அறிவிக்கப்பட்ட போது மாத்திரமல்ல, அதற்கு பின்னரும் நிலைமை பரிதாபமாகத்தான் இருந்தது. அந்தக் கட்சியில் இருந்து மூவர் தெரிவானால் மாத்திரமே அவர் தெரிவாகலாம் என்ற நிலைமைதான் இருந்தது. அப்படி மூன்று பேர் அல்ல, இரண்டு பேரே வருவார்களோ தெரியவில்லை. ஆனால், இன்று நிலைமை கொஞ்சம் மாறியிருக்கின்றது. அதாவது இரண்டு பேர் வந்தாலும் அவர் தெரிவாகலாம் என்ற நிலைமை".

எப்படி அந்த நிலைமை மாறியது என்பதை அறியாவிட்டால் இந்த ஊர்க்குருவியின் தலை வெடித்துவிடுமே. "அது எப்படி மாறியது?" என்றேன்.

"தான் எம். பியாக தெரிவானதும் மாவட்டத்திலுள்ள கட்சிக்காரர்கள் அதாவது பழைய தலைவர்கள், முன்னாள் எம். பிக்கள் எல்லோருமே தன்னை விரோதியாகப் பார்த்தார்கள் என்றும் அதனால் தனக்கு கட்சியில் ஒருவராவது ஆதரவாக இருக்க வேண்டுமே என்பதற்காகவே அந்த வடக்கின் கட்சித் தலைவர் ஒருவருடன் நெருக்கமாக வேண்டி வந்தது எனவும் அவரோடு நெருக்கமாகியது இப்போது தனக்கே பிரச்னையாகிவிட்டது என்றும் அவர் கூறிவருகிறார். அத்துடன், இனி அவருடன் நெருக்கமாகப் பணியாற்றப் போவதில்லை எனவும் தேவாலயங்களில் இயேசுவிடம் பாவமன்னிப்பு கேட்டுப் பழக்கப்பட்ட அவர், தனது வாக்காளர்களிடமும் பாவமன்னிப்பு கோரி வருகிறாராம். அதனால் இப்போது அவருக்கு சற்று ஆதரவு கூடிவருகின்றது..." என்றார் அவர்.

இப்போது நேற்றைய கதை அவருக்கும் பொருத்தமானதுதான் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

- ஊர்க்குருவி.

## கற்கோவளம் இரட்டை கொலை மூன்று சந்தேகநபர்கள் கைது!

வடமராட்சி, நவ. 02

பருத்தித்துறை கற்கோவளத்தில் கணவனும் மனைவியும் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்கோவளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தம்பதியர் இருவர் படுகொலை செய்யப்பட்டனர்.

தொழில் போட்டி காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையிலேயே இந்தக் கொலை தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்க்காக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரயந்த அமரசிங்க தலைமையிலான விசேட பிரிவுகளும் ,மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சேந்தன் தலைமையிலான அணிகளும் தீவிரமாக செயல்பட்டிருந்தன.

(ஐ)

## வலி. கிழக்கு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 02

வலி. கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிர தேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.



பராமரிப்பின்றி காணப்படும் பற்றைக் காணிகளை உடனடியாக துப்புரவு செய்யுமாறு ஒலிபெருக்கி மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டு வருவதுடன் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களாலும் பொதுச் சுகாதார பரிசோத கர்களாலும் அடையாளம் காணப்படும் பற்றைக் காணிகளுக்கு சிவப்பு அறிவித்தலும் ஒட்டப்படுகின்றது.

இரு வார காலத்தில் பற்றையாகவும் நுளம்பு பெருகும் இடமாகவும் உள்ள காணியை துப்பரவு செய்யத் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உரியவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.11.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மனப்பால் குடிக்கும் ரணிலும் அவரின் அணியும்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயணம் செய்யும் பாதையை நோக்கும்போது எதிர்க்கட்சி நாளடைவில் அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடியதாக இருக்கும் போன்று தெரிகிறது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன்னர் புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கூறினார்.

அவரை மீண்டும் தீவிர அரசியலுக்கு கொண்டுவருவது குறித்து பேச்சு எதுவும் நடத்தப்படவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் தொடர்ந்து ஆட்சியை நடத்தமுடியாமல் போகும்பட்சத்தில் அவரின் சேவையை விரும்பி மீண்டும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வருமாறு மக்கள் கேட்கக்கூடும் என்று பத்திரிகை நேர்காணலில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்த்தன கூறினார்.

அதேவேளை, புதனன்று கண்டியில் மக்கள் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜெயரத்ன கடந்த ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலமாக ஆட்சி செய்ததைப் போன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ந்து ஆட்சி செய்யுமானால் இன்னமும் ஆறு மாதங்களில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று கூறினார்.

இவர்களின் கருத்துகளை நோக்கும்போது இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பொறுப்பை விக்கிரமசிங்கவிடம் கையளித்தமை போன்று தற்போதைய ஜனாதிபதி திஸநாயக்கவும் தன்னால் தொடர்ந்து ஆட்சியை நடத்த முடியாமல் போகும் பட்சத்தில் பொறுப்பை ஏற்பதற்கு விக்கிரமசிங்கவை அழைப்பார் என்று நினைக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரித்த பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பாராளுமன்றத் தேர்தலுக்காக அமைத்துக் கொண்டதே புதிய ஜனநாயக முன்னணி. அதன் தேர்தல் பிரசாரங்களில் அரசியல்வாதிகள் அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கு பாராளுமன்றத் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்குமாறு மக்களை கேட்பதாகத் தெரியவில்லை. பலம் வாய்ந்த எதிரணியாக செயல்படுவதற்காக தங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறுதான் கேட்கிறார்கள்.

விக்கிரமசிங்கவும்கூட தனது அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளில் இருந்தவர்கள் பொருளாதார விவகாரங்களை கையாள்வதில் திறமை வாய்ந்தவர்கள் என்று கூறி அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று மக்களிடம் கேட்கிறார்.

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத் தேர்தலில் அதிக பெரும்பான்மையாக புதியவர்களையே வேட்பாளர்களாக நிறுத்தியிருப்பதால் அவர்கள் பாராளு மன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும்பட்சத்தில் பொருளாதார விவகாரங்களையோ, பாராளுமன்ற அலுவல்களையோ கையாள்வதில் பிரச்னைகளை எதிர்நோக்கு வார்கள் என்றும் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்படும் எனவும் விக் கிரமசிங்கவும் அவரை சார்ந்தவர்களும் பிரசாரங்களை முன்னெடுத்திருக் கிறார்கள். இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்று கணிப்பீடுகளை செய்யும் இவர்கள் அடுத்த பாராளுமன்றத்தில் எந்த கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை பலம் கிடைக்காது என்றும் கூறுகிறார்கள்.

ஆனால், ஜனாதிபதி திஸநாயக்க தன்னால் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பலம் பொருந்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு தங்களை அமோகமாக ஆதரிக்குமாறு மக்களைக் கேட்கிறார். புதிய ஜனாதிபதி தனது அதிகாரத்தை வலுப்படுத்தி ஆட் சியை உறுதியான முறையில் தொடருவதற்கு வசதியாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்கள் ஆணையை வழங்குவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியாலும் அவரின் கட்சியாலும் உருப்படியான முறையில் ஆட் சியை நடத்த முடியாது என்ற பிரசாரத்தை முன்னாள் ஜனாதிபதியும் புதிய ஜன நாயக முன்னணியும் முன்னெடுத்து வருவதன் நோக்கம் அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலம் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்காமல் இருப்பதை உறுதி செய்வதேயாகும்.

திஸநாயக்க தேர்தலில் பிரேமதாஸவையும் விக்கிரமசிங்கவையும் தோற் கடித்தே ஜனாதிபதி பதவிக்கு வந்தவர். அவர் தற்போது அமைத்திருக்கும் மூன்று அமைச்சர்களைக் கொண்ட காபந்து அரசாங்கத்தால் உடனடியாக சகல பிரச்னைகளுக்கும் தீர்வைக் காண்பது சாத்தியமில்லை. அதை அநுகூலமாக பயன்படுத்திக்கொண்டு எதிர்ப்பிரசாரங்களை மேற்கொள்ளும் புதிய ஜனநாயக முன்னணியினர் விக்கிரமசிங்க மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான சூழ் நிலை உருவாகும் என்று மனப்பால் குடிக்கிறார்கள். அதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
- வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)



# நினைவுகள் இறப்பதில்லை




மனித வாழ்வு இறப்பைக் கடந்தும் நிலைக்கின் றது என்பது கிறிஸ்தவமா கும். யூத மரபில் சாவைத் துயில்கொள்ளுதல் எனக் கருதினார். கடவுளை ஆபிரகாம், ஈசாக், யாக் கோபின் கடவுள் என அழைத்து, வாழ் வோரின் கடவுளாக அங்கீகரித்தனர். இறை சாயலாகப் படைக்கப் பட்ட மனிதன் இறை வன் எனும் பேரொளியில் சங்கம மாவதைத் தன் கதியாகக் கொண்டு பயணிக்கின்றான். அதனால், இறப்பைக் கடந்த வாழ்வு இவ்வுலக வாழ்விற்குப் பொருள் கொடுக்கின்றது.

சாவு ஒரு தவிர்க்கமுடியாத இழப்பு. இவ் விழப்பு மனித மனங்களில் பெரும் துன்பத் தைப் பிறப்பிக்கின்றது. இழப்பின் பொழுது அழுது வடித்து, ஆறுதல் பெறுவது ஆரோக் கியமான சிகிச்சைமுறையாகும். இது அனைத்து கலாச்சாரங்களிலும் காணப்படும் ஆற்றுப்படுத்தல் பண்பாகும்.

கார்த்திகைத் திங்கள் 2ம் நாளில் அனைத்து இறந்தோர்களையும் ஒருங்கே நினைவுகூர்ந்து வேண்டுதல் செய்வது திரு அவையின் பாரம் பரியத்தில் வலுவாக இடம்பிடித்துள்ள நிகழ்வாகும். இதனைக் கல்லறைத் தோட்டத் திருநாள் எனவும் அழைக்கிறோம்.

இறந்தோரை நினைவுகூர்ந்து, அவர்கள் விண்ணகப் பேரின்பத்தை அடைவதற்காக இறை வேண்டல் செலுத்தும் வழக்கத்தினை "தூய்மை பெறும் நிலை" என அன்னையாம் திரு அவை படிப்பிக்கிறது. எம்மை விட்டுப் பிரிந்து இறந்துபோன எமது அன்புறவுகளது ஆன்மாக்கள் எந்நிலையிலுள்ளன என எமக் குத் தெரியாவிடினும், இறந்து உத்தரிப்பு நிலையில் வேதனைப்படும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் யாரும் நினை யாத ஆன்மாக்களை இந்நாளில் நினைந்து அவர்கள் மீளாத்துயில் கொள்ளும் கல்லறை களைத் தரிசிக்கச் சென்று, கண்ணீர் விட்ட ழுது மலர்களாலும், மெழுகுதிரிகளாலும் அலங்கரிப்பது எமது வழக்கமாகும்.

இரக்கமுள்ள இறைவன் எமது உருக்கமான வேண்டுதல்களுக்கு கனிவோடு செவிசாய்ப் பவர். இவ்வுலகை விட்டுப்பிரிந்து இறந்து போன ஆன்மாக்களுக்காக செபிப்பது முற்றிலும் பொருத்தமானதே. இந்நினைவு நாளில் இறைவேண்டலோடு மட்டும் நின்று விடாது அவர்கள் பெயரால் தான தர்மங்கள் செய்து, நினைவேந்தலை முன்னெ டுப்பது அனைத்து சமயங்களுக்கும் பொது வான அறச் செயலாகும்.

இந்நினைவேந்தல் வெறுமனே சில உணர்வுரீதியான செயற்பாடுகளாக மட்டும் அமையாமல் அவர்கள் விட்டுச் சென்ற நல்ல பாடங்களை மீள் கற்றுக் கொள்ளும் அனுப வங்களாகவும் அமைய வேண்டும். குறிப்பாக, அவர்கள் ஆளுமையில் மிளிர்ந்த அன்பு, கனிவு. தியாகம் போன்ற பண்பகளையும் அவர்கள வாழ்வில் கடைப்பிடித்த கொள்கை களை ஒரு கணம் மீட்டுப் பார்த்து. எம் வாழ்விலும் அவற்றைத் தொடர்கதையாக்கு வது சாலப் பொருத்தமாகும்.


நாம் செபிக்கின்ற ஆன்மாக்கள் இறை சந்நிதானத்தில் இளைப்பாற்றி அடைவார் களாயின், எமது வேண்டுதல்களை இறைவன் கனிவோடு கண்ணோக்கிப் பலமடங்கான ஆசீர்வாதங்களால் எம்மை நிரப்புவார்.

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. ஏன்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடிருக்கும்பொழுது என்னடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்."(யோவான் 11:25-26).

இயேசுக் கிறிஸ்துவின் இக்கூற்றில் நம்பிக்கை வைப்பவர் தாமும் தம் முன்னோ ரும் இறைவன் எனும் பேரொளியில் முடி வில்லா வாழ்வைப் பெறுவதை தமது ஆவலா கவும் எதிர்நோக்காகவும் கொண்டு பயணிக் கின்றனர். இவ்வுலகை விட்டுப் பிரிந்த எம் உடனுறவுகள் யாவரும் புனிதர்களின் தோழமையில் இணைந்து, பேரின்பம் பெற. தொடர்ந்தும் அவர்களுக்காக இறைவனை வேண்டுதல் செய்வோம்.

- அருட்தந்தை ஜீவா போல் அடிகளார்

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் அனுகூலமுண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வீட்டாரின் ஆதரவு பெருகும். உங்களைச் சுற்றியிணருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
பழைய நினைவுகளின் இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். கடன்கள் வசூலாகும். அமைதியான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். மனநிறைவு ஏற்படும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பழைய பிரச்சனைகள் தீரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்சனைகள் வந்து நீங்கும். குடும்பத்தினருடன் இணக்கமாக செல்லவும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். விலை உயர்ந்தப் பொருட்களை கவனமாக கையாளுங்கள். சோர்வு வந்து விலகும். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புகழ்கூடும் நாள்.

**மகரம்**
எதையும் தாங்கும் மனோ பலமும் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.



வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் பொது நூலகம் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளின் பரிசளிப்பு விழா அண்மையில் உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## கிளி. மாவட்ட செயலகத்துக்கு வடக்கு ஆளுநர் வருகை!

*கிளிநொச்சி, நவ. 02*

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு நேற்று கண்காணிப்பு பயணமாக சென்றிருந்தார்.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட செயலாளர், வட மாகாண பிரதம செயலாளர், மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, காணி சம்மந்தமான விடயம், மாவட்டத்தின் சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று கூறப்பட்டது. (ஐ)

## அத்துமீறிய மரம் தறிப்பை தடுத்தவர் மீது தாக்குதல்!

*முல்லைத்தீ, நவ. 02*

தனது காணியிலுள்ள பனை மரங்களை அத்துமீறி தறித்தவர்களை தடுத்த முதியவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் 76 வயது முதியவரே காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கற்சிலைமடுவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முதியவரின் வயல் காணியில் உள்ள பனை மரங்களை அவரின் அனுமதியில்லாது சிலர் தறித்தனர் என்றும் இதனை அவர் தடுத்திருந்தார். இந்த நிலையில், மாடுகளை மேய்த்து வரும் அவர், மாடுகளை பட்டிக்கு அழைத்து வந்தபோதே தாக்கப்பட்டுள்ளார். ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

# மாவீரர் துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணிகள் ஆரம்பம்!

*யாழ்ப்பாணம், நவ. 02*

மாவீரர் தினத்தை முன்னிட்டு துயிலும் இல்லங்களில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்றைய தினம் கோப்பாய் துயிலும் இல் லம் முன்பாக துப்புரவுப்பணி நடைபெற்றது.

இந்த துப்புரவு பணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியினர் ஈடுபட்டனர். (எ- 05)



# வளர்மதி முன்பள்ளி சிறாருக்கு பொலிஸார் கற்றல் உபகரணம்!

*யாழ்ப்பாணம், நவ. 02*

தீபாவளியை முன்னிட்டு வட்டுக்கோட்டை வளர்மதி முன்பள்ளி மாணவர்களுக்கு பொலிஸார் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (ஐ-05)



# மின்சார சபையினர் இரத்த தானம்!

*யாழ்ப்பாணம், நவ. 02*

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பணிமனையினரால் நேற்று இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் இந்த இரத்த தான நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை மின்சார சபையின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தால் இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்குடா தாக்குதல் திட்டத்தின் பின்னணியில் தீவிரவாதம் இல்லை!

## அமெரிக்காவுக்கு அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 02

**அறுகம் குடாவில் தாக்குதல் திட்டத்தின் பின்னணியில் தீவிரவாதமில்லை. இது ஒரு திட்டமிடப்பட்ட குற்றச்செயல் என்று அரசாங்கம் அமெரிக்காவுக்குத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அமெரிக்க தூதரக அதிகாரிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்த, ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அமெரிக்க தூதரக அதிகாரிகளை சந்தித்தனர்.

இந்த சந்திப்பில், அறுகம் குடா தாக்குதல் தொடர்பில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டமை உட்பட பல விடயங்கள் குறித்து அரசாங்க அதிகாரிகள் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினர்.

விசாரணைகளின் போது தெரியவந்த விடயங்கள் குறித்தும் விளக்கமளித்தனர். தனிநபர் குழுவொன்றே இந்த தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டது. இதன் பின்னணியில் எந்த வித தீவிரவாதமும் இல்லை என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அத்துடன், அமெரிக்கா விடுத்த பயண எச்சரிக்கையை நீக்கவேண்டும் என்றும் என்றும் அதிகாரிகள் அமெரிக்க தூதரகத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர். இந்த சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

# வேகமாகப் பரவும் சின்னம்மை நோய்

## 4ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை தடுப்பூசி

கொழும்பு, நவ. 02

நாட்டில் வேகமாகப் பரவி வரும் சின்னம்மையை கட்டுப்படுத்த தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை அம்மை தடுப்பூசி வழங்கும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட இரண்டு தடுப்பூசிகளை பெறாத, ஒரு தடுப்பூசி மாத்திரம் பெற்ற தடுப்பூசி வழங்கப்பட்டமைக்கான உரிய சான்றுகளற்ற அனைவருக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் 206 மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

9 மாதங்களுக்கு மேற்பட்ட, 19 வயதுக்கு உட்பட்ட தடுப்பூசி பெறாதவர்களுக்கும் சின்னம்மை தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. (அ)

# ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் மீண்டும் எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 02

தீபாவளியை முன்னிட்டு இடைநிறுத்தப்பட்ட பணிப் புறக்கணிப்புக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் இன்று சனிக்கிழமை மீண்டும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், பணிப்புறக்கணிப்பு நேற்று இடம்பெறவில்லை என சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு நடைமுறைகளை முறைப்படுத்துதல், சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு காணுமாறு கோரி கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் அன்றைய தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சூரிச் - கட்டுநாயக்கா இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்

கொழும்பு, நவ. 02

குளிர்கால வருகையை யொட்டி சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரில் இருந்து புதிய விமானம் ஒன்று நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

எடெல்வீஸ் எயார்லைன்ஸ் எயார்பஸ் ஏ 330 வகை விமானமே இலங்கையை வந்தடைந்தது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நீர் வணக்கம் செலுத்தப்பட்டது.

நேற்று காலை 09.20 மணியளவில் எடெல்வீஸ் எயார்லைன்ஸின் டபிள்யூ.கே.-68 என்ற இந்த விமானத்தில் 17 வணிக வகுப்பு பயணிகளும் 221 பொருளாதார வகுப்பு பயணிகளும் இதர 13 பணியாளர்களும் என 251 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.



வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சூரிச்சில் இருந்து புறப்பட்டு, நேரடியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் இந்த விமானம், அன்றைய தினம் காலை 10.05 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு இரவு 10.05 மணிக்கு மாலைதீவு வழியாக சூரிச்சுக்குத் திரும்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விமானங்கள் 2025 ஜனவரி முதல் வாரத்தில் இரண்டு நாட்கள் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிச்சிலிருந்து கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குளிர்கால விமான சேவையின் விமானங்கள் 2025 மே மாதம் வரை இயக்கப்படும்.

# பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 1,259 முறைப்பாடுகள்

கொழும்பு, நவ. 02

பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி வரை) 1,259 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 342 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 873 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 13 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 31 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (அ)

# ருஹுணு குமாரி தடம்புரள்வு

கொழும்பு, நவ. 02

காலி - ஜிந்தோட்டை பகுதியில் நேற்று அதிகாலை ருஹுணு குமாரி ரயில் தடம் புரண்டதன் காரணமாக, கரையோர மார்க்க ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டது. இதனால், கரையோர ரயில் மார்க்கத்தில் கொழும்பிலிருந்து பூஸா மற்றும் காலி முதல் கஹாவ வரை பயணிக்கும் ரயில்கள் தாமதமாகியதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# லொஹானுக்கு சொந்தமான மற்றொரு வாகனமும் சிக்கியது

கொழும்பு, நவ. 02

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பயன்படுத்தினார் என்று கூறப்படும் போலி இலக்கத் தகடு பொருத்தப்பட்ட மற்றுமொரு ஜீப் வண்டி கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, தெல்தெனிய பிரதேசத்தில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றின் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த ஜீப் வாகனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஜீப் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள இலக்கத் தகட்டில் உள்ள இலக்கங்கள் அதே பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு நபரின் வாகனத்தில் உள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜோன்ஸ்டனுக்கு பிணை

கொழும்பு, நவ. 02

சதொச ஊழியர் குழுவொன்றை கடமையிலிருந்து நீக்கி வேறு பணிகளில் ஈடுபடுத்திய வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இதற்கமைய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை 25,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், 10 இலட்சம் ரூபாய் மேலதிக பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டார். (அ)

# ரூ. 200 கோடி பெறுமதியான ஹெரோயினுடன் விசேட அதிரடிப்படையினரால் தம்பதி கைது!

கொழும்பு, நவ. 02

200 கோடி பெறுமதியான 54 கிலோ ஹெரோயினுடன் தம்பதியர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் மூன்று விசேட அதிரடிப் பிரிவுகளின் அதிகாரிகள் குழுவொன்று செவநகர நுகேகலய, கிரிவெவ பிரதேசத்தில் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

வீட்டின் முன்றலில் புதைக்கப்பட்டிருந்த மூன்று பிளாஸ்ரிக் கொள்கலன்களில் மறைத்து வைத்திருந்த 53 கிலோ 65 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் அந்த வீட்டில் வசிக்கும் கணவனும் மனைவியும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த வருடம் 30 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட ஓமல்பகே தம்மிக்க சமன்குமாரவின் சகோதரி என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# லொஹானுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, நவ. 02



இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசு கார் விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை நுகேகொடை மேலதிக நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும், ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

நுகேகொடை - மிரிஹான வில் உள்ள அவரது மனைவி வீட்டில் இலக்கத் தகடுகள் இல்லாத கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துரோகிகளிடம் விழிப்பாய் இருங்கள்!

## சிவஞானம் சிறீதரன் கோரிக்கை



கிளிநொச்சி, நவ. 02

**ஈழத்தமிழர்களின் வரலாற்றை மாற்றும் முயற்சியில் இனத்துரோகிகள் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள். அத்தகையவர்களின் கருத்துத் திணிப்புகள் தொடர்பில் இளைய தலைமுறையினர் அவதானமாக இருக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி - வட்டக்கச்சி வட்டாரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

எமது இனத்தின் இருப்புக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் அத்தனையையும் நீண்டகால நோக்கோடும், நிபுணத்துவ ஆற்றலோடும் நிறுவிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சிந்தனையிலும் செயல்நோக்கிலும் உருவாக்கம் பெற்றது தான், அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம்.

ஆனால், அதன் உருவாக்கத்தில் ஒரு துரும்பைத்தானும் அசைத்திராத, வடக்கிலுள்ள முன்னாள் அமைச்சர் ஒருவர், அத்தகைய வரலாற்றுப் பெரும் பணிக்கு தற்போது உரிமை கோரி வருகிறார். எங்களது வரலாறுகளை மறைத்தும் திரித்தும் வரும் இத்தகைய இனத்துரோகிகள் தொடர்பில் எமது மக்களும், இளைய தலைமுறையினரும் விழிப்பாய் இருக்க வேண்டும் - என்றார். (அ)



## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர்கள் யாழ். ஆயருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 02

பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்தனர்.

யாழ் மறைவாட்ட ஆயர் இல்லத்தில் நேற்று காலை இந்த சந்திப்பு இடம்பெற்றது. பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் பெண் வேட்பாளரான சசிகலா ரவிராஜ் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் யசோதினி கருணாநிதி அகியோர் கலந்து கொண்டனர். (அ)



## கமலரூபனின் விஞ்ஞாபனம் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 02

சுயேச்சைக் குழு 2 இல் போட்டியிடும் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கமலரூபனின் ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று முன் தினம் யாழ்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் உள்ள காரைநகர், வாரி வளவு கற்பக விநாயகர் ஆலயம், யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில், வடம ராட்சி பொற்பதி புனித இரா யப்பர் ஆலயம், தென்மராட்சி சாவகச்சேரி நகர லஸ் நிலையம் மற்றும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றின் முன்பாக வெளியிடப்பட்டது. (அ)

## மீனவர்களுக்காக பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபடுவேன்

### சிவாஜிலிங்கம் கூறுகிறார்




வடமராட்சி, நவ. 02

இம்முறை தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவு செய்யப்பட்டால் நீண்ட காலமாக நீடித்துவரும் மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பாடுபடுவேன் என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீனவர் பிரச்னையானது இரண்டு நாட்டு பிரச்னையாகும். தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் தமிழீழ மீனவர்களுக்கும் இடையில் தீராதுள்ள இந்த பிரச்னை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களும் நேரில் பேசுவதன் மூலமே இணக்கமான சூழலை ஏற்படுத்த முடியும்.

மீனவர் பிரச்னை தொடர்பில் பேசுவதற்கு எமது மீனவர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வருமாறு கடந்த காலத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்னை தொடர்பு கொண்டு கோரியிருந்தார். அதற்கு நடவடிக்கை எடுத்த போது மீனவர்கள் தரப்பில் செயற்பட்ட சிலர் ஒத்துழைக்கவில்லை.

இம்முறை தேர்தலின் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவு செய்யப்படுவேனாக இருந்தால் மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண பாடுபடுவேன். பாராளுமன்றத்துக்கு உள்ளாகவும் வெளியாகவும் இதற்காக பாடுபடுவேன். எமது மீனவர்களை இராமேசுவரத்துக்கு அழைத்துச் சென்று நேரடியாக அங்குள்ள மீனவர்களுடன் பேச்சு நடத்துவதற்கும் தமிழக, இந்திய அரசு மட்ட பேச்சுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பேன்.

எமது மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றாக நிற்க வேண்டும் என்பதுவே மக்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. ஒவ்வொரு கட்சியும் தங்களது அரசியலை தனித் தனியா முன்னெடுத்தாலும் தமிழ் மக்களுடைய பொது பிரச்னைகளில் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக முன்வர வேண்டும் - என்றார். (அ-02)

## சஜித், ஹக்கீம், ரிஷாத் ஆகியோருக்கு திருமலையில் இம்முறை வாக்கில்லை

### அப்துல்லா மஹ்ரூப் தெரிவிப்பு

திருமலை, நவ. 02

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை சஜித் , ஹக்கீம், ரிஷாத் போன்றோர்களுக்கு வாக்குகள் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று முன் தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் அடியும் உதையும் கொடுத்து வருகின்றபோது, மக்கள் மத்தியில் சிலிண்டருக்கு வாக்குகள் காணப்படுகின்றன.

சமூகத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்ற நாம் கிராமம் கிராமமாக வீடு வீடாகச் செல்கிறோம் .இம்முறை தேர்தலின் பின் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய ஜனநாயக முன்னணி நாடு முழுவதும் 60 இற்கும் மேற்பட்ட ஆசனங்களை பெற்று அநுர குமார அரசாங்கத்துடன் பங்காளிக் கட்சியாக பிரதமராக ரணில் ஆட்சியமைப்பார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து தேசிய மட்டத்தில் கருத்து கூற தெரியாதவர்கள் தங்களின் சுய இலாப அரசியலுக்காக அநுரவுடன் இணைந்து அமைச்சரவையில் ஆட்சியமைப்போம்-என்றார். (அ)

## மாவீரர் நினைவேந்தலின்போது அரசின் உண்மை முகம் தெரியும்

### ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி தெரிவிப்பு

வவுனியா, நவ. 02

மாவீரர் தினத்தை நினைவு கூரும்போதும் அநுர அரசாங்கத்தின் உண்மை முகத்தை அறியமுடியும் என முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஜனநாய தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு- கிழக்கு பகுதியிலும் எமது இளைஞர்கள் அநுர குமாரவுக்கு பின்னால் அணி திரள்வது போன்ற ஒரு நிலைமை இருக்கிறது.

அது உண்மையில் ஒரு மாயை. அரசியல் நோக்கத்திற்காக இந்த பாராளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதற்காக சினிமா பாணியில் கருத்துக்களை கூறுகிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தான் அவர்களுடைய உண்மை முகம் தெரியும்.

தமிழ் மக்களுக்காக அநுர என்ன தீர்வினை தரப் போகின்றார் என்பதும், தமிழ் மக்களுக்காக என்ன புதிய விதிமுறைகளை உருவாக்கப் போகிறார்கள் என்பதும் வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தான் தெரியவரும்.

அத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவீரர் தினத்தை நினைவு கூருகின்ற போது அவர்களுடைய நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதைப் பொறுத் துத்தான் அவர்களுடைய நிலைப்பாட்டை அறிய முடியும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடும் பொம்மையாக அநுர அரசு

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, நவ. 02

**அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடும் பொம்மையாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

மத்திய கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் பெரும்பான்மையான மக்களுக்கு தருவதாக கூறிய சலுகைகளை இன்னமும் வழங்கவில்லை. இவற்றை செய்வதற்கு பாராளுமன்ற பெரும்பான்மை தேவையில்லை. இந்த பிரச்னைகளை தீர்க்க முடியாத காரணத்தினால் அரசாங்கம் திணறி வருகிறது. மறுபுறம் மக்கள் அழுத்தங்களை சந்தித்து வருகின்றனர்

தேர்தல் மேடையில் கூறப்பட்ட வரி குறைப்பு எதுவும் நடந்தபாடில்லை. இந்த வரிகளை குறைக்க சர்வதேச நாணய நிதியம் இணங்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வு கூட பிற்போடப்பட்டுள்ளது

சர்வதேச நாணய நிதியத்தின் தாளங்களுக்கு ஆடமாட்டேன் என்று சொன்னவர்கள், இன்று சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கு ஆடும் பொம்மையாக அரசாங்கம் மாறியுள்ளது - என்றார். (அ)

# பாராளுமன்றத் தேர்தலில் முடிந்தால் 115 ஆசனங்களைக் கைப்பற்றுங்கள்!

## அநுரவுக்கு மஹிந்தானந்த பகிரங்க சவால்



கொழும்பு, நவ. 02

பொதுத்தேர்தலில் முடிந்தால் 115 ஆசனங்களையாவது கைப்பற்றிகாட்டுமாறு தேசிய மக்கள் சக்திக்கு முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜே.வி.பியினர் கடந்த பல தசாப்தங்களாக விமர்சன அரசியலையே முன்னெடுத்துவந்தனர். அப்போது அக்கட்சியினர் எதிரணியில் இருந்தனர். இன்று ஆளுங்கட்சியில் உள்ளனர்.

எனினும், மாற்றம் இல்லை. முன்னாள் அரசுகளால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களே செயல்படுத்தப்படுகின்றன.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆதரவு குறைந்துவருகின்றது. எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவு இதை வெளிப்படுத்தியது.

நாம் ஆட்சியைக் கைப்பற்ற முற்படவில்லை. பலமான எதிரணியை அமைக்கவே முயற்சிக்கின்றோம். பொதுத்தேர்தலில் முடிந்தால் 115 ஆசனங்களையாவது தேசிய மக்கள் சக்தி கைப்பற்றி காட்டட்டும்- என்றார். (அ)

# பொருளாதாரக் கொள்கை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்!

## அரசிடம் சாகல கோரிக்கை

கொழும்பு, நவ. 02

அரசாங்கம் தமது பொருளாதார கொள்கை குறித்து நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்கம் பின்பற்றும் கொள்கை என்ன என்பது தொடர்பில் தெளிவற்ற நிலைமை காணப்படுகிறது. இந்த ஒப்பந்தம் குறித்து தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கேள்விகளுக்கு பதிலளிக்காத ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தற்போது பிரதமரை அதற்காக முன்னிலைப் படுத்துகிறார்.

2025 மற்றும் 2026 ஆகிய இரு வருடங்களில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. வரவு - செலவு திட்டத்தின் ஊடான இதனை நடைமுறைப் படுத்துவதற்கும் எமது அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

ஆனால் பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொய் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையில் தேசிய மக்கள் சக்தி பொய் கூறியுள்ளது.

நாட்டின் பிரதமராக பொறுப்பான பதவியிலிருந்து கொண்டு பொய் கூறிக் கொண்டிருப்பவரை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்ய வேண்டுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். அத்துடன் புதிய அரசாங்கம் தனது பொருளாதார கொள்கை என்னவென்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (அ)

# அரசாங்கம் செய்யும் தவறுகளை ஜனநாயகக் குரல் சுட்டிக்காட்டும்!

## கூறுகின்றார் ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, நவ. 02

"திருடர்களை அரசாங்கம் பாதுகாக்க முற்படுமானால், அதனை சுட்டிக்காட்ட பலமான எதிர்க்கட்சியாக தாங்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்" என்று ஐக்கிய ஜன நாயகக் குரல் கட்சியின் தலைவரான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தீபாவளி தினமான நேற்று முன் தினம் ரஞ்சன் ராமநாயக்க கொச்சிக்கடை, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து கோயிலுக்கு வருகை தந்திருந்த பக்தர்களுடன், அவர் சுமுக கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதன்போதே ரஞ்சன் ராமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தீபாவளி பண்டிகை என்பது இருளில் இருந்து வெளிச்சத்துக்கு மக்களை அழைத்துச் செல்லும் பண்டிகையாகும். அனைத்து இன மக்களுக்கும் கௌரவமளிக்கும் கட்சி என்ற வகையில், நாம் அனைத்து இந்து மக்களுக்கும் இவ்வேளையில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏனைய கட்சிகளில், மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள திருடர்களுக்கு தான் தேர்தலில் களமிறங்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தான் நான் எனக்காக ஒரு கட்சியை ஸ்தாபித்து, ஐக்கிய ஜனநாயகக் குரல் எனும் இந்தக் கட்சி ஊடாக மைக் சின்னத்தில் இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம்.

இந்தத் தேர்தலில் எந்தவொரு ராஜபக்ஷவினரும் கிடையாது. இவர்கள் அனை வரும் ஒழிந்து விட்டார்கள். சுமார் 60 பேரளவில் தேர்தலில் இருந்து ஒய்வுப் பெற்றுள்ளார்கள்.

எனவே, இந்தத் தேர்தலானது எமக்கு பாரிய சவாலாக இருக்காது என்றே நாம் நம்புகிறோம். எமது தரப்பில்தான், நேர்மையானவர்கள் உள்ளார்கள் - என்றார். (அ)

# எங்களுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் வேட்டை ஆரம்பம்

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, நவ. 02

எமக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் வேட்டை ஆரம்பமாகியுள்ளது. நாட்டில் சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு இருப்பதால் எமக்கு பயம் இல்லை." - என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சிஸ்டம் சேஞ்ச் என பேசப்பட்டாலும், அரசியல் பழிவாங்கலே இடம்பெறுவதைபோல் தெரிகின்றது. ஜோன்ஸ்டன் பெர்னான்டோவுக்கும் அதுவே நடந்துள்ளது.

இந்நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பில் எவரும் கை வைக்க முடியாது. நீதித்துறை சுயாதீனமாக இருக்கின்றது என நம்புகின்றோம். அதனால் அரசியல் பழிவாங்கல் வேட்டைக்கு நாம் அஞ்சவில்லை. விசாரணைகளை எதிர்கொள்ளவும் புலம்பவில்லை.

அதேவேளை பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி தீர்க்கமான சக்தியாக உருவாகும். தேர்தலை நோக்கி கட்சியை வழிநடத்த வேண்டும் என்பதாலேயே நான் தேர்தலில் போட்டியிடவில்லை.

ஜனாதிபதி தேர்தலைவிடவும் பொதுத்தேர்தலில் நிலைமை மாறும். எமக்கான ஆதரவு நிச்சயம் அதிகரிக்கும்- என்றார். (அ)

# தேர்தல் மேடைகளில் உறுதியளித்த விடயங்களை அரசு செய்யவில்லை!

## ஹிருணிகா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 02

தேர்தல் மேடைகளில் உறுதியளிக்கப்பட்ட விடயங்களை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்த முடியவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


தேர்தல் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பல்வேறு உறுதிமொழிகளை வழங்கினார். எரிபொருளை மிகக் குறைவான விலைக்கு விநியோகிக்க முடியும் எனக் கூறினார். ஆனால் இப்போது நடந்தது என்ன?

யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியாமல் ஆட்சியமைக்கும் நோக்கில் போலியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடனான மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிகிறோம். அதன் உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தை ஆரம்ப காலம் முதலே தேசிய மக்கள் சக்தியினர் எதிர்த்து வந்தார்கள். இப்போதைய நிலைப்பாடு என்னவென்பதை மக்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். மேலும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரான லால் காந்த பெண்களை மிக மோசமாக சித்தரித்து கருத்துகளை வெளியிட்டு வருகிறார். அதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். தவறான கருத்துகளை வெளியிடும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நாம் அரச தரப்பிடம் கோரிக்கை விடுக்கிறோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தபால் மூல வாக்களிப்பு நேற்று கிழக்கில் அமைதியாக நடந்தது



மட்டக்களப்பு, நவ. 02

**பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் இரண்டாம் நாளான நேற்று கிழக்கு மாகாணத்தின் அரச திணைக்களங்களில் அமைதியாக நடந்தது.**

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகம் ஆகிய அரச திணைக்களங்களில் காலை 8.30 மணிக்கு முதல் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகியிருந்தது.

மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர் ஜஸ்ரினா முரளிதரன் தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உதவி தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலருமான எம்.ஏ.எம்.சுபியானின் மேற்பார்வையின் கீழ் வாக்களிப்பு நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 241 அரச உத்தியோகத்தர்கள் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில், தமது வாக்குகளை, பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்ட, தபால் மூல வாக்களிப்பு நிலையத்தில் பதிவு செய்தனர்.

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இன்று தோப்பூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்திலும் சகல அரச திணைக்களங்களிலும் அமைதியான முறையில் வாக்களிப்பு நடைபெற்றது. (ஐ)



# நவம்பர் 5ஆம் திகதி வரையே பெரும்போக விதைப்பு காலம்

திருக்கோவில், நவ. 02

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள கஞ்சிகுடியாறு, ரூபஸ் குள பாய்ச்சலுக்குட்பட்ட காணிகளுக்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, விதைப்பு கால எல்லை கடந்த 20ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 05 ஆம் திகதி வரை எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ். நிருபா, தம்பிலுவில் நீர்ப்பாசன அலுவலக பொறியாளர் எந்திரி. ரி. ராஜேஸ் கண்ணா, கால்நடை வைத்திய அதிகாரி யூ. கதீஸ்வரன், தம்பிலுவில் கமநல சேவை பொறுப்பு உத்தியோகத்தர் எம். அஜந்தன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ். கந்தசாமி மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகள், கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ)

# கந்தசஷ்டி விரதம் ஆரம்பம் 7ஆம் திகதி சூரசம்ஹாரம்!

திருக்கோவில், நவ. 02

இந்துக்களின் கந்தசஷ்டி விரதம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ஆறு நாட்கள் விரதம் அனுஷ்டித்து ஆறாம் நாளாகிய 07 ஆம் திகதி வியாழக்கிழமை சூரசம்ஹாரம் நடைபெறவுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் கந்தசஷ்டி விரதம் வழமைபோன்று இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

கந்தசஷ்டி விரதம் 07 ஆம் திகதி சூர சம்ஹாரத்துடன் நிறைவு பெறுகின்றது.

வழமைக்கு மாறாக ஏராளமான பக்தர்கள் விரதத்தை இம்முறை அனுஷ்டிக்கவுள்ளனர்.

இவ்வருடம் கந்தசஷ்டி விரதத்துக்கான சஷ்டித்திதி 06 ஆம் திகதி புதன்கிழமை முன்னிரவு 10. 18 மணிக்குகூடி மறுநாள் 07 ஆம் திகதி வியாழக்கிழமை முன்னிரவு 9. 35 மணிக்கு கலைகிறது என்று பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார்.

8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணம் நிகழ்வுடன் விரத உற்சவம் நிறைவு பெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் அ. செல்வராஜா தெரிவித்தார். (எ)



# காட்டு யானைகள் நுழைந்து மூதூரில் பெரும் அட்டகாசம்

## கிராம மக்கள் கவலை - அச்சம்

மூதூர்இ நவ. 02

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவு கிராமத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் அட்டகாசத்தில் ஈடுபட்டு அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இதன்போது பயன்தரும் மரங்களை யானைகள் துவம்சம் செய்ததாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக தமது கிராமத்துக்குள் காட்டு யானைகள் நுழைந்து சேதம் விளைவிப்பதால் பயிர்ச் செய்கைகள் சேதமடைவதாகவும், இரவு வேளைகளில் வீட்டில் உறங்குவதற்கும் அச்சமாகவுள்ளதாகவும் மக்கள் கூறினர்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் யானைகளைத் தடுக்க பாதுகாப்பு வேலி அமைத்துத்தர வேண்டுமென வும் மூதூர் மல்லிகைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# திருமலையில் இறந்து ஒதுங்கும் மீன்கள்!

திருகோணமலை, நவ. 02

திருகோணமலை கடற்பரப்பில் அதிகளவான சிறிய மீன்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் நாரா நிறுவனத்திடம் வினவியுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட இயற்கை காரணங்களால் இவ்வாறு மீன்கள் இறந்திருக்கலாம் என நாரா நிறுவனம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. (ஐ)

# பாழடைந்த கிணற்றில் வீழ்ந்து சிறுவன் பலி!

மட்டக்களப்பு, நவ. 02

பாழடைந்த கிணற்றில் 3 வயது சிறுவன் தவறிவீழ்ந்து உயிரிழந்தான்.

மட்டக்களப்பு - வந்தாறுமூலையில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், பிரதீஸ்வரன் ரோஹித் என்ற சிறுவனே உயிரிழந்தான்.

சிறுவன் தனது வீட்டின் வளவில் கைவிடப்பட்ட, ஆனால், தகரத்தால் மூடப்பட்ட கிணற்றின் அருகே நின்று விளையாடியுள்ளான். இந்த நிலையிலேயே கிணற்றில் சிறுவன் தவறி வீழ்ந்துள்ளார்.

மகனை காணவில்லை என்று பெற்றோர் தேடிய போதே கிணற்றிலிருந்து சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம். எஸ். எம். நசீர் சம்பவ இடத்துக்குச் சென்று, முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தார்.

ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறு தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கு வர்த்தக சந்தை



களுவாஞ்சிக்குடி, நவ. 02

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு களுவாஞ்சிக்குடி பெரண்டினா நிறுவனத்தின் ஏற்பாட்டில் வர்த்தக சந்தை நடைபெற்றது.

இந்த வர்த்தக சந்தை சிறு தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் எனும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன் சிறப்பாக நடைபெற்றதுடன் பிரதம விருந்தினராக பெரண்டினா நிறுவனத்தின் வலய முகாமையாளர் பி. பிரதிபிபன் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு, பெரண்டினா நிறுவன் கிளை முகாமையாளர் வி. விதுர்சனா உள்ளிட்ட ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

சட்டவிரோதமாக தங்கியிருந்து

# வியாபாரத்தில் ஈடுபட்ட இரு இந்தியர்கள் கைது!

ஏறாவூர், நவ. 02

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வீசாவில் வந்து சட்டவிரோதமாக தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் நாடு மதுரையைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து ஏறாவூர் தளவாய் பகுதியிலுள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்து முற்றுகையிட்ட போது அங்கு எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் சட்டவிரோதமாக தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

மதுரையைச் சேர்ந்த 38 வயது பெண்ணும் அவரின் சகோதரரான 51 வயது ஆணும் கடந்த ஜூன் மாதம் சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வந்து இந்தப் பகுதியில் தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர் என்றும் கைதான இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கமலா ஹாரிஸ்வும் பைடனும் இந்துக்களை ஏமாற்றிவிட்டனர்!

### டொனால்ட் ட்ரம்ப் சாடல்

வாஷிங்டன், நவ. 02

கமலா ஹாரிஸும் ஜோ பைடனும் அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களை நிராகரித்து விட்டனர். எனது நிர்வாகத்தின் கீழ், இந்தியாவுடனும் எனது நல்ல நண்பருமான பிரதமர் மோடியுடனான நமது சிறந்த கூட்டாண்மையையும் வலுப்படுத்துவோம் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"பங்களாதேஷில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இன்னபிற சிறுபான்மை மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களை நான் வன்மையாக கண்டிக்கிறேன். அந்த நாட்டில் இன்னும் ஒரு குழப்பமான நிலை நீடிக்கிறது.

நான் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. கமலா ஹாரிஸும் ஜோ பைடனும் அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களை நிராகரித்து விட்டனர். இஸ்ரேல், உக்ரைன் முதல் நம்முடைய தெற்கு எல்லை வரை அவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், நாங்கள் மீண்டும் அமெரிக்காவை வலிமையான நாடாக மாற்றி, அமைதியை கொண்டு வருவோம் - என்று கூறியுள்ளார். (ஐ)

# சில நிபந்தனைகளுடன் போரை நிறுத்தத் தயார்

### ஹிஸ்புல்லா தலைவர் அறிவிப்பு

பெய்ரூட், நவ. 02

**சில நிபந்தனைகளுடன் போரை நிறுத்த நாம் விரும்புகிறோம். இஸ்ரேலும் இந்த முடிவை எடுத்தால் நாம் ஏற்கிறோம் - என ஹிஸ்புல்லா அமைப்பின் புதிய தலைவர் நயீம் காசிம் கூறியுள்ளார்.**



ஹிஸ்புல்லா தலைவர் மற்றும் முக்கிய தளபதிகளின் மரணத்துக்கு பின்னர் நயீம் காசிம் தலைவராக தெரிவானார். அவர் முதன் முறையாக பொதுவெளியில் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும்,

சில நிபந்தனைகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு தயாராக இருக்கிறோம். லெபனானில் இஸ்ரேல் படையினரின் வான் மற்றும் தரை வழித் தாக்குதல்களை பல மாதங்களுக்கு தொடர்ந்து தடுத்து நிறுத்துவதற்கு ஹிஸ்புல்லாவால் முடியும். இந்த போரை நிறுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். இஸ்ரேல் முடிவு மேற் கொண்டால், நாங்கள் அதனை ஏற்று கொள்கி றோம் - என்றும் கூறியுள் ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில் பலர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்புக்கு எதிராக பலஸ்தீனம் மீது இஸ்ரேல் படையெடுத்தது. இதில், இதுவரை 42 ஆயிரம் அப்பாவி பொது மக்கள் உயிரிழந்தனர். பலஸ்தீனத்துக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் ஹிஸ்புல்லா அமைப்பை குறிவைத்து லெபனான் மீதும் தாக்குதல் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## குர் ஆனை பெண்கள் சத்தமாக ஓதக்கூடாது

### தலிபான்கள்

காபூல், நவ. 02

ஆப்கானிதானில் பெண்கள் சத்தமாக பிரார்த்தனை செய்வதோ அல்லது மற்ற பெண்களின் முன்பு குர் ஆனை ஓதுவதோ தடை செய்யப்பட்டுள்ளது என்று தலிபான் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் வெளியேறிய பின்னர், 2021ஆம் ஆண்டு முதல் மீண்டும் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பெண்களின் கல்விக்கு தடை விதித்த தலிபான்கள் மேலும் பல கட்டுப்பாடுகளை பெண்கள்மீது விதித்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே பெண்கள் குர் ஆனை சத்தமாகவும் மற்றப் பெண்கள் முன்பாகவும் ஓதுவதை தடை செய்துள்ளது. இதேபோல, இஸ்லாமிய நம்பிக்கையின் மையமான 'சுபானுல்லா' போன்ற வார்த்தைகளையும் உச்சரிக்கக்கூடாது. தொழுகைக்கான அழைப்பு விடுக்க பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. எனவே அவர்கள் பாடல் பாடுவதற்கும் அனுமதி இல்லை" இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

# சீனாவின் மௌனம் அதிர்ச்சி அளிக்கிறது

கீவ், நவ. 02

உக்ரைனுக்கு எதிரான போரில் வட கொரிய படையினர் பயன்படுத்தப்படுகின்றனர். இந்த செயலை தெரிந்துகொண்டும் சீனா மௌனமாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது சமூக வலைத்தளத்தில் இட்டுள்ள பதிவில்,

ரஷ்யா போர் விரிவாக்கங்களில் ஒன்றாக வட கொரியாவுடன் பகிரங்கமாக கூட்டாளியாக பயணிக்க தொடங்கி உள்ளது.



அவர்கள் மில்லியன் கணக்கான பீரங்கி குண்டுகளை வாங்கி வருகின்றனர். அந்த பீரங்கி குண்டுகள் மற்றும் ஏவுகணைகள் எங்கள் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட உள்ளன. ஆனால் இப்போது அது வெறும் ஆயுதங்கள் அல்ல. 3 ஆயிரம் வட கொரிய இராணுவ வீரர்கள் தற்போது பயிற்சி முகாமில் இருப்பதாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது. மேலும் அந்த எண்ணிக்கை 12 ஆயிரம் வீரர்கள் மற்றும் அதிகாரிகளாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வட கொரியாவின் நடவடிக்கைகள் தற்செயலானவை அல்ல, சீனா எங்கள் பக்கம் இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால், இந்த விவகாரத்தில் சீனாவின் மௌனம் அதிர்ச்சி அளிக்கிறது" - என்று கூறியுள்ளார்.

### தேர்தல் பிரசாரம் உச்சம்:

## குப்பை லொறியில் ட்ரம்ப் பரப்புரை!

வாஷிங்டன், நவ. 02




இறுதிக்கட்டப் பிரசாரத்தின் போது குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் கழிவு அகற்றும் வாகனம் ஒன்றில் செம்மஞ்சள் அங்கியுடன் தோன்றி ஆதரவாளர்களை ஆச்சரி யப்படுத்தியுள்ளார்.

ட்ரம்பின் வாக்காளர்களைக் 'குப்பைகள்' என்று விளித்து வெளியேறி செல்லும் ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட கருத்துக்கு பதிலடியாகவே - அவரின் கருத்து மீது தனது ஆதரவாளர்களது கவனத்தை ஈர்ப்பதற்காக - ட்ரம்ப் இவ்வாறு குப்பை அகற்றும் வாகனம் ஒன்றில் தோன்றிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

பரப்புரை ஊர்தியாக மாற்றி வடிவமைக்கப்பட்ட ஒரு குப்பை அகற்றும் வாகனத்தில் செம்மஞ்சள் மேலங்கி அணிந்து தோன்றிய அவர் அதிலிருந்தவாறே செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

"என்னுடைய குப்பை வண்டியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" - என்று செய்தியாளர்களை பார்த்துக் கேட்டார் ட்ரம்ப்.

"இது பைடனும் கமலா ஹாரிஸும் அளித்த கௌர வம்" - என்று கூறிய அவர், "கமலாவும் ஜோவும் உங்களைக் குப்பை என்று அழைக் கட்டும் நான் உங்களை அமெரிக் காவின் ஆன்மாவாகக் காண்கி றேன்", என்று தனது ஆதரவாளர்க ளுக்குக் கூறி அவர்களை உற்சாகப் படுத்தினார்.

பரப்புரைகளின் உச்சக்கட்டத்தில் குடியரசுக் கட்சி ஆதரவாளர்களைக் குப்பைகள் என்று கூறிய பைடனின் கூற்று அவரின் உப ஜனாதிபதி கமலா ஹரிஸுக்குப் பெரும் நெருக்கடியையும் தர்ம சங்கடத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் இந்த விடயத்தைத் தனக்கு ஆதரவாகத் திசைதிருப்புவதில் குறியாக உள்ளார். குப்பை அகற்றும் வாகனத்தில் வந்து வாக்காளர்களை உசுப்பிவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஸ்பெயினில் கொட்டித் தீர்த்தது கனமழை 155 பேர் உயிரிழப்பு; மேலும் பலர் மாயம்!

- 8 மணி நேரத்தில் 499 மி. மீ. மழை
- தொடரும் மழையால் மீட்பு பணி பாதிப்பு



பார்சிலோனா, நவ. 02

ஸ்பெயினில் 8 மணி நேரத்தில் 499 மில்லிமீற்றர் மழை கொட்டித் தீர்த்ததால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி சுமார் 155 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்க ளின் உடல் களை தேடும் பணியை ஸ்பெயின் முடுக்கி விட்டுள்ளது.

வெள்ளத்தில் சேதமடைந்த வீடுகள் மற்றும் கார்களில் உயிரிழந்தவர் களின் உடல்கள் உள்ளனவா என தேடும் சவால் நிலை அங்கு நிலவுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை பின்னிரவு மற்றும் புதன் கிழமை ஸ்பெயினில் கனமழை பொழிந்தது. 8 மணி நேரத்தில் 499 மில்லிமீற்றர் மழை கொட்டித் தீர்த்தது.

இதில், கிழக்கு வலேன்சியா பகுதி மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் சாய்ந்த மின்கம்பங்கள், வேரோடு சாய்ந்த மரங்கள், சேறும் சகதியுமான வீதிகள் மற்றும் வீடுகள், ஒன்றானமீது ஒன்றாக நின்ற கார்கள் என்று திரும்பும் பக்க மெல்லாம் சேதம். இதற்கு மத்தியில் தான் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் உடல் களை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் முதல் தேடுதல் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. பலர் காணாமல் போயிருப்பதால் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை ஹெலிகொப்டர் மூலமாகவும் ஸ்பெயின் இராணுவம் மீட்டது. சுமார் 70 பேரை இப்படி மீட்டதாக தகவல் கிடைத்துள்ளது. மீட்கப்பட்டவர்கள் மொட்டை மாடி மற்றும் கார்களில் சிக்கி இருந்தவர்கள். தரைவழியாக வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதியை புதன் கிழமை அன்று அணுக முடியாத சூழலை இராணுவம் எதிர்கொண்டது. தற்போது அங்கு வீடு வீடாக இராணுவத்தினர் மீட்பு பணியை மேற்கொண்டுள்ளனர்.

மழை வெள்ளத்தால் ஸ்பெயின் நாட்டின் தெற்கு பகுதியில் விளை நிலங்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. வியாழக்கிழமையும் அங்கு மழை தொடர்ந்தது. சுமார் 1.5 இலட்சம் மக்கள் அங்கு மின்சார வசதி இல்லாமல் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
# பாராளுமன்ற தேர்தல் 2024

## ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2




நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு!
இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

## அரசியல் மற்றும் பொருளாதார சிந்தனையுள்ள
### மண்ணையும், மக்களையும், நேசிக்கும் ஆளுமைமிக்க இளைஞனே

## மக்களின் எதிர்பார்ப்பு...

### தந்தையாரின் சமூகப்பணிகள் சில...




யா / தேசிய கல்வியியற் கல்லூரியால் "கல்விக்காருண்யன்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது...

### சிறு வயது முதல் களத்தில் கமல்...



சென் ஜோன்ஸ் கல்லூரியில்...



கொழும்பு இந்துக் கல்லூரியில்...



வடக்கின் சமர் அனுசரணையின் போது...




இந்துக்களின் சமர் அனுசரணையின் போது...



கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்க முத்தமிழ் விழாவின் தலைமை .உரையின் போது...



சிறுவர்களுக்கான கல்வி வழிகாட்டல்களின் போது...



தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கான காணி அன்பளிப்பு...



பாடசாலை கட்டுமானங்கள் தொடர்பான கள விஜயம்



தேர்தல் களத்தில் கமல்...

ஊஞ்சல் சின்னம்
சுயேச்சைக் குழு - 2

X 1 2 3 4 5 6 7 8 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவின்...

முன்னதாக, மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு 60 அதிகாரிகள், 2 ஜீப் வாகனங்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓர் ஓட்டோ என்பன மட்டுமே வழங்கப்பட்டுள்ளன என்று சுற்றறிக்கை வெளியானதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீதியை...

அபிவிருத்தியை, பாதுகாப்பை உறுதி செய்வேன். வடக்கு மாகாண மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று மூன்று தசாப்தகாலத்தின் பின்னர் பலாலி - அச்சுவேலி வீதியை மீளத்திறந் தமையை கௌரவமான விடயமாக கருதுகிறேன். பாதுகாப்பு அமைச்சின் உதவியுடன் எங்கள் மக்களின் அபிவிருத்தி, பாதுகாப்பை உறுதிசெய்வது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளோம் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## மீண்டும்...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசாங்கம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மற்றும் குழுவினருடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்களுக்காக இலங்கைக் குழுவொன்று வாஷிங்டன் சென்றுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் புதிய அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது - என்றார். (அ)

## வயாவிளான்...

கொள்ளப்பட்டன. எனினும், இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேறவோ, ஆலயங்களில் வழிபடவோ மக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, இவற்றுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று அந்த இடத்தைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் உத்தரவுக்கு அமையவே இந்த வீதி மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வல்லை...

தோலகட்டி சந்தி வரையிலான வீதி கடந்த 34 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தின் பிடியிலுள்ளது.

பலாலி வீதியில் வயாவிளான் சந்தியிலிருந்து அச்சுவேலி தோலகட்டி சந்தி வரையான சுமார் ஒன்றே கால் கிலோ மீற்றர் தூரமான வீதி நேற்றைய தினம் திறந்து வைக்கப்பபட்டது. இந்த நிலையில், மீதமுள்ள வீதி இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே உள்ளது. எனவே, அந்த வீதியையும் திறந்து வைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையில், வயாவிளான் சந்தியிலிருந்து அச்சுவேலி தோலகட்டி சந்தி வீதி திறக்கப்படாததால், பாவனைக்கு விடுவதன் வலி. வடக்கு மற்றும் தெல்லிப்பழை மருத்துவமனைக்கு வருவதற்கு, வல்லை - அராலி வீதியூடாக பயணித்து , வயாவிளான் சந்தியை அடைந்து , குரும்பசிட்டி ஊடாக சுற்றி , மீண்டும் வல்லை - அராலி வீதியை அடைந்தே தமது பயணத்தை தொடர வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

# ரணிலின் கொள்கைகளையே அநுர மாற்றமின்றி தொடர்கிறார்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, நவ. 02

ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்டத்தை மறுசீரமைப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை எவ்வித மாற்றமுமில்லாமல் தொடர்கிறார். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், அரசியல் ரீதியில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளோம். ஜனாதிபதித் தேர்தலில் போது எம்முடன் இருந்தவர்கள் குறுகிய அரசியல் தேவைகளுக்காக எம்மை விட்டுச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்கள் இன்று அரசியலில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

பொதுத்தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளோம். ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்கள். ஆகவே, பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி பதவியை பொதுஜன பெரமுனவுக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க 1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களையும் விமர்சித்தார். ஆகவே, இம்முறை அவர் அரசாங்கத்தை நிர்வகிக்கட்டும். அப்போது சொல்வது இலகு - செய்வது கடினம் என்பதை அறிவார்.

ராஜபக்ஷர்கள்மீது போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்தே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்டத்தை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆனால், பதவியேற்று ஓரிரு நாட்களில் நாணய நிதியத்துடனான செயல் திட்டத்தை எவ்வித மாற்றமுமில்லாமல் தொடர்வதாக நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக கடுமையான தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டதால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நடுத்தர மக்களின் நலனை கருத்திற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையையே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னெடுக்கிறார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கி வாக்குறுதிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் தான் ஜனாதிபதி செயல்படுகிறார்.

பொதுத்தேர்தலுக்கு பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக குறிப்பிடுவது மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயல்பாடாகும். வெறுப்பை முன்னிலைப்படுத்தி கைப்பற்றிய ஆட்சியை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது - என்றார். (ஐ)

## அநுரவின் சதியை...

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் மட்டக்களப்பு வேட்பாளர்களின் அறிமுக நிகழ்விலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதி அநுரகுமார நல்லாட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பின் இடைக்கால அறிக்கையை நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளார். மிகவும் மோசமான - பிற்போக்குவாதமாக உருவாக்கப்பட்ட இந்த இடைக்கால அறிக்கையை நிறைவேற்றப் போவதாக அறிவித்துள்ளார். அவருக்கு நன்றாகத் தெரியும் வடக்கு, கிழக்கில் தமக்கு செல்வாக்கு கிடையாது. ஆனால், இந்த இடைக்கால அறிக்கையை கொண்டுவரும்போது தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் அதை ஆதரிப்பார்கள். அதுதான் அவர்களுக்கு முக்கியமான தேவை.

2015 வடக்கு, கிழக்கில் தெரிவான 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை ஆதரித்தனர் என்றால் எதிர்வரும் தேர்தலில் தெரிவாகும் பிரதிநிதிகளில் குறைந்தது 10 பேராவது ஆதரிப்பார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் துணிந்து தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கான தீர்வாக அன்று 18 பேர் ஆதரவளித்தனர் அநுரவுக்கு அந்த நம்பிக்கையான தரப்பு யார்? அன்று ஆதரவளித்த 18 பேரும் யார்? அதில் 16 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். அவர்கள் தமிழ் மக்களிடம் சமஷ்டிக்கான தீர்வை பெற ஆணை வழங்குமாறு கேட்டனர். அதனை நம்பி மக்கள் அமோக வெற்றியை கொடுத்தார்கள். அவர்கள் வென்று பாராளுமன்றம் சென்ற அடுத்த நிமிடம் இந்த ஒற்றையாட்சிக்கு இணங்கினார்கள்.

இவர்கள் தற்போது பிரிந்து கேட்டாலும் பாராளுமன்றத்துக்கு 10 பேர் சென்று அறுதி பெரும்பான்மை காண்பிப்பார்கள் என்பதே அநுரவின் நம்பிக்கை. எனவே, சரித்திரத்தில் முதல் தடவையாக தமிழரே ஒற்றையாட்சியை விரும்பி ஏற்றுக் கொள்கின்ற மாபெரும் வரலாற்று துரோகத்தை செய்வதற்கான ஒரு முயற்சியாக 14ஆம் திகதி தேர்தல் அமையக்கூடும்.

அந்த வரலாற்று மாற்றத்தைத் தடுக்கக்கூடிய ஒரே ஒரு தரப்பு எம்முடைய மக்கள். அதனால்தான் நாங்கள் இந்த தேர்தல் எங்களுடைய தலைவிதியை அடிப்படையிலே மாற்றி அமைக்கக் கூடிய தேர்தலாக இது இருக்கின்றது என எச்சரிக்கை விடுக்கிறோம்.

தமிழினம் ஓர் இனவாத இனமல்ல. சிங்களவருக்கோ - பௌத்தத்துக்கோ நாங்கள் எதிரிகள் அல்ல. எங்களுக்கான இருப்பை - பாரம்பரியத்தை மற்றவர்கள் மதிக்கவேண்டும். அதேவேளை எங்களுடைய அடையாளங்களை அங்கீகரித்து கொண்டாடவேண்டும். நீங்கள் வேறுபாடுகளற்ற கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். அதை செய்யாமல் பெரும்பான்மையாக இருக்கின்ற நீங்கள் எங்களின் இருப்பை அழிக்கின்ற வகையில், செய்வதை ஜனநாயகம் என்ற ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவேதான் ஒற்றையாட்சி முறைமை ஒருநாளும் எமக்கு பாதுகாப்பை கொடுக்காது. இதனாலேயே, இலங்கையில் ஏற்படுத்திய 3 அரசமைப்புகளை தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ளோம்.

போர் முடிந்து 15 வருடங்களின் பின்னரும் மாறிமாறி வந்த ஒவ்வோர் அரசாங்கமும் இங்கு ஒரு பயங்கரவாத பிரச்னை மட்டும்தான் இருப்பதாக சொல்லியும் சர்வதேசம், இல்லை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அரசமைப்பை அவர்களின் ஆதரவோடு எப்போது நிறைவேற்றுகின்றீர்களோ. அன்றுதான் இந்த இனப்பிரச்னை தீர்க்கப்பட்டதாக கருதுவோம் என்றது.

எனவே, அநுரவின் சதித் திட்டத்தை முறியடிக்கும் ஒரே ஒரு தரப்பு நாங்கள் தான். எனவே, எங்களில் 10 பேரை பிரதிநிதிகளாக அனுப்ப மக்கள் ஆணை வழங்கவேண்டும்- என்றார். (ஐ)

## சுற்றுலா சென்ற...

இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பதுளை போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை பதுளை - மகியங்கனை வீதியில் 4ஆவது மைல்கல் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்கள் பயணித்த பேருந்தே விபத்துக்குள்ளானது.

இந்தப் பேருந்தில் 35 மாணவர்கள், விரிவுரையாளர்கள் இருவர், இராணுவ அதிகாரிகள் இருவர் மற்றும் சாரதி உட்பட 41 பேர் பயணித்திருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## உற்பத்தியாளர்...

வலுப்படுத்தவும், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தவும், வர்த்தக நட்பு ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும் முடிந்தால் நாட்டில் முதலீடு செய்ய சர்வதேச உற்பத்தியாளர்கள் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் இந்தியானாவை தளமாகக் கொண்ட ஷீல்ட் நிறுவனத்தின் புதிய சீட்பெல்ட் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்,

இலங்கையில் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக ஷீல்ட் நிறுவனம் எடுத்த முடிவு இலங்கையில் அமெரிக்க முதலீட்டையும் அதிகரிக்கும்.

அமெரிக்கா ஏற்கனவே இலங்கைக்கான மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக உள்ளது. இங்கு நேரடியாக அதிக அமெரிக்க முதலீட்டைப் பார்ப்பது அற்புதமானது. வரவிருக்கும் ஆண்டுகளில் இரு தரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு இரு வழிகளிலும் விரிவடைவதை காண விரும்புகிறோம்.

புதிய அரசாங்கம் முதலீட்டு சூழலை வலுப்படுத்தவும், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை செயல்படுத்தவும், வணிக நட்பு ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும் முடிந்தால் இன்னும் அதிகமான முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும்.

முதலீட்டுச் சூழல் வலுவாக இருந்தால் நிறுவனங்கள் வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவமானது பகிரப்பட்ட இலக்குகள் மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பயிர் விளைச்சலை அதிகரிப்பதில் இருந்து, கொழும்பில் உள்ள நகர்ப்புற ஏழைகளுக்கு தீர்வு காண பாடசாலைகளுக்கு மதிய உணவு திட்டத்தை விரிவுபடுத்தியது முதல் பல்வேறு ஒத்துழைப்புகளை அமெரிக்கா வழங்கி வருகிறது. இலங்கையின் கடல் பாதுகாப்பை வலுப்படுத்தல், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை உறுதி செய்தற்கும் அமெரிக்கா ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 8,450 சுங்க விசாரணைகள் தீர்க்கப்படாத நிலையில்!

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தகவல்

கொழும்பு, நவ. 02

**இலங்கை சுங்கத்தின் பல்வேறு திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட 8450 சுங்க விசாரணைகள் பல வருடங்களாக தீர்க்கப்படாமல் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளிப்படுத்தியுள்ளது.**

இவற்றில் 3080 விசாரணைகள் ஐந்தாண்டுகளுக்கு மேலாக தீர்க்கப்படாமல் உள்ளன.

4348 விசாரணைகள் இரண்டு முதல் நான்கு ஆண்டுகளாகவும், 1022 விசாரணைகள் ஒரு வருடமாகவும் தீர்க்கப்படாமல் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாண்டு ஆரம்பம் வரையிலான இந்த விசாரணை அறிக்கையில் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையின் படி குறித்த தொகைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக சுங்கத்தின் பிரதான கணக்காய்வு அதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

# மின்னல் தாக்கி சிறுமி பலி!

கொழும்பு, நவ. 02

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பத்தன்ன பகுதியில் மின்னல் தாக்குதலுக்குள்ளான நிலையில் 11 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமி தனது தந்தை மற்றும் சகோதரனுடன் வீட்டின் பின்புறம் அஸ்திவாரம் வெட்டிக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்குதலுக்கு இலக்கானார்.

அதேநேரம், அவரது சகோதரரும் மின்னல் தாக்கி பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். தந்தைக்கு காயம் ஏற்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பன்றிப் பண்ணைகளை பதிவு செய்ய அறிவுறுத்து!

கொழும்பு, நவ. 02

நாட்டில் உள்ள அனைத்து பன்றிப் பண்ணைகளும் அருகில் உள்ள கால்நடை அலுவலகத்திற்குச் சென்று தகவல்களை வழங்கிப் பதிவு செய்யுமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் கேட்டுள்ளது.

நாட்டிலுள்ள சில பன்றிப் பண்ணைகளில் உள்ள பன்றிகள் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பன்றிக்காய்ச்சல் நிலை முதலில் மேல் மாகாணத்தில் பதிவாகியதாகவும், தற்போது ஊவா, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் இது பதிவாகியுள்ளதாக மேல்மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே. சரத் கூறினார். (அ)

# தேர்தல் செலவினச் சட்டத்தின்படி செயல்படத் தவறியுள்ளார் ரணில்

## பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, நவ. 02

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, தேர்தல் செலவின சட்டத்தின் பிரகாரம் செயற்படத் தவறியுள்ளதாகக் குற்றச்சாட்டு முன்வைத்து பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்கான பிரஜைகளின் அமைப்பால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் செலவின ஒழுங்குப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் சகல வேட்பாளர்கள், கட்சிகள், சுயேச்சை வேட்பாளர்கள் ஆகியோர், அவர்களின் தேர்தல் பிரசாரத்துக்கான வரவு செலவு அறிக்கைகளை தேர்தல் ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதி வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலவு அறிக்கைகளை பரிசீலனை செய்த போது, ரணில் விக்கிரமசிங்கவின் செலவறிக்கையில் சட்டத்தின் பிரகாரம் பெற்றுக்கொடுக்க வேண்டிய பணம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு ஆவணமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு பக்கங்களைக் கொண்ட செலவு அறிக்கையை மாத்திரமே ஆணைக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளதாகவும்,

தமது முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்து வழக்கு தாக்கல் செய்ய பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# குரோத அரசியலுக்கு நீடித்த ஆயுள் கிட்டாது!

## பிணையில் வந்த ஜோன்ஸ்டன்

கொழும்பு, நவ. 02

குரோத அரசியலே தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. குரோத அரசியலின் பயணத்துக்கு நீடித்த ஆயுள் கிடையாது என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மை நிச்சயம் வெல்லும். நீதிமன்றம் ஊடாக அது நடக்கும் என நம்புகின்றேன். நான் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். பின்வாங்கவில்லை. மாற்றத்துக்காகவே மக்கள் வாக்களித்தனர். அந்த மாற்றத்தை அவர்கள் (தேசிய மக்கள் சக்தி) செய்ய வேண்டும்.

நடைமுறை சாத்தியமான விடயங்களையே செய்வதற்கு முற்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் உறுதிமொழிகளை வழங்கினால் மாட்டிக்கொள்ள நேரிடும். அதற்கான நாள் தொலைவில் இல்லை.

2015 இலும் குரோத அரசியல் முன்னெடுக்கப்பட்டது. தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (அ)

# இலங்கை வருகின்றார் மாலைதீவு ஜனாதிபதி!



கொழும்பு, நவ. 02

மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்ஸு விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் மசூத் இமாட் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, மாலைதீவு ஜனாதிபதி விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளாரென தூதுவர் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகளையும் ஆராய்ந்தார்.

மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் சுற்றுலா, சுகாதாரம் மற்றும் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் இந்த உரையாடல் நடைபெற்றதாக ஜனாதிபதியின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான மாலைதீவு பிரதி தூதுவர் பாத்திமத் கினாவும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார். (அ)




# ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 02

ஓட்டோ வீதியை விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். பிபிலை - மகியங்கனை வீதியில் தும்பலேருவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தின்போது, முச்சக்கரவண்டியின் பின்புறத்தில் அமர்ந்திருந்த இருவரும் காயமடைந்த நிலையில் பிபிலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் பின்னர் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மொனராகலை, பிபிலை பிரதேசத்தை சேர்ந்த 64 வயதுடைய நபரொருவரே உயிரிழந்தார். விபத்தையடுத்து ஓட்டோ சாரதி பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிபிலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அடுக்குமாடியில் இருந்து விழுந்த பெண் உயிரிழப்பு

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு, நவ. 02

கொழும்பில் பிரபல அடுக்குமாடி குடியிருப்பின் ஒன்பதாவது மாடியில் இருந்து வீழ்ந்து 29 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு 8, கோட்ட வீதியில் வசித்து வந்த குறித்த பெண், அடுக்குமாடி குடியிருப்பை வாடகைக்கு எடுத்து தனியாக வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை தொடர்ந்து நீதவான் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 13 மாணவர்கள் மருத்துவமனையில்!

கொழும்பு, நவ. 02

கேகாலை, அரநாயக்க, திப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 13 மாணவர்கள் திடீர் சுகயீனமுற்று அரநாயக்க மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அரநாயக்க, திப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 6 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் 12 மாணவிகளும் ஒரு மாணவனுமே மருத்துவமனை சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாராந்தம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பாடசாலையில் உள்ள மாணவர்களின் பெற்றோர்களால் உணவு தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட கடலை வகையை உட்கொண்ட பின்னரே இந்த மாணவர்கள் சுகயீனமுற்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org